[2013 ஏப்ரல் 16

231—

நியாய விலைக் கடை கட்டடம்

***3687—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், விஜயாபதி ஊராட்சி, அரசர்குளம் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள், விஜயாபதி ஊராட்சி, அரசர்குளம் நியாயவிலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டமுடியுமா என்று கேட்டிருக்கிறார். தற்போது கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து ஒரு பங்கு நிதி பெற்று, இரண்டு பங்கு அரசு மானியம் கொடுத்து அந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதிவிரைவில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுத் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கிடும் பேரன்புப் பெட்டகமே! புகழே! புகழ்ச்சியே! (மேசையைத் தட்டும் ஒலி) புறநானூற்றின் புது வடிவே! தாயாகி, தந்தையாகி, தமிழர் குலச் சாமியாகி, யாதுமாகி நிற்கும் எங்கள் தாயுமானவரே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, வணக்கம். முப்பரம்பொருளுக்கும் முதல்வனான இராமபிரானின் பாதம்பட்டு கல்லாய் இருந்த அகலிகை தன் சாபத்திலிருந்து விமோசனம் பெற்றார் என்கிறது புராணம். அதுபோல, புல்லாய் இருந்தவர்களும்,*

2013 ஏப்ரல் 16]

உங்கள் பார்வை பட்டதும் இந்தப் புனித ஜார்ஜ் கோட்டைக்குள் (மேசையைத் தட்டும் ஒலி) பதவிகள் பெற்று சாப விமோசனம் பெற்றார்கள் என்பது சரித்திரம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிரே வந்து தன்னிடம் வேண்டுபவர்களுக்கு கன நொடியில் கலி தீர்க்கிற கருணையின் உருவமாய்த் திகழ்கிற நமது அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) பெறுபவரின் நிறமோ, குணமோ, மனமோ பார்ப்பது கிடையாது, வாங்குபவரின் முகத்தில் வந்து நிற்கும் புன்னகை ஒன்றைத்தான் அம்மா அவர்களின் வாஞ்சை கொண்ட மனது கருத்தில் கொள்கிறது. அதனால்தான் எதிரியின் மகனுக்கும் இல்லையென்று சொல்லாமல் கொடுக்கிறார்கள். சிலருக்கு எதிர்க்கட்சி இருக்கையைக்கூட யாசகமாகத் தருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். அவர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) எதற்கு இப்போது எழுந்து நின்று பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) அவர், பொதுவாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவர், தவறாக ஒன்றும் பேசவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களைக் குறிப்பிட்டு ஒன்றும் பேசவில்லை. (குறுக்கீடுகள்) அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) என்ன? நீங்கள் மிரட்டுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) இது முறையில்லை (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரிடம் பேசுவது போன்று பேசுங்கள், இது முறையில்லை. (குறுக்கீடுகள்) அதை நீங்கள் நல்லவிதமாகக் கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்) இப்படி மிரட்டுவது போன்ற தொனியில் கேட்கக்கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, இது தவறு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் Unparliamentary word எதுவும் பேசவில்லை. (குறுக்கீடுகள்) பொதுவாகத்தான் பேசினார், யாரையும் குறிப்பிட்டு அவர் பேசவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் இதில் பிரச்சினையை எழுப்புவது தவறு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களைக் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை, உட்காருங்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அமைச்சர் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுக் கூடாது, அதனால் அதை நீக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மைக்கேல் ராயப்பன் அவர்கள்

பேசியதில் எந்தக் குற்றச்சாட்டுமே இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் இருக்கையை யாசகமாக அம்மா அவர்கள் உருவாக்கிக்கொடுத்தார்கள் என்கிற உண்மையைத்தான் சொல்லியிருக்கிறார். அதில் குற்றச்சாட்டே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) செய்தியாகத்தான் சொல்லியிருக்கிறார். அவர் நடந்த நிகழ்வுகளை இங்கே குறிப்பிட்டிருக்கிறாரே தவிர, அதில் எந்த வகையில் எங்கே குற்றச்சாட்டு வருகிறது? அவர் உண்மையைச் சொன்னது உங்களுக்கு குற்றச்சாட்டாகத் தெரிந்திருக்கிறது. அதை நீக்க வேண்டிய அவசியமே இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சி. மைக்கேல் ராயப்பன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், குற்றச்சாட்டு இல்லாதபோது, இந்த மாதிரி நீங்கள் எழுப்பக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசுங்கள், அவருக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பில், அவர் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இதில் ஒன்றும் உங்களுக்குப் பேச வாய்ப்பில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சி. மைக்கேல் ராயப்பன், நீங்கள் பேசுங்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலருக்கு எதிர்க்கட்சி இருக்கையைக்கூட யாசகமாகத் தருகிறார்கள். அப்படிப் பெற்றுக் கொண்ட சிலர் நன்றியைக் கொன்றுபோடுகிறார்கள். (குறுக்கீடுகள்) ஆனால், என் போன்றவர்கள் எப்போதும் நன்றியைக் கொண்டு வாழ்வோம் என்பதைச் சொல்லி, (குறுக்கீடுகள்)*

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இந்த மாதிரி கலாட்டா செய்து கொண்டிருந்தால், நன்றாக இல்லை. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்). இல்லை, நீங்கள் உட்காரவில்லையென்றால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காரவில்லையென்றால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். கேள்வி நேரத்தில் நீங்கள் இந்த மாதிரி கலாட்டா செய்வது தவறு. நீங்கள் செய்வது முறையில்லை. (குறுக்கீடுகள்) அவர் பொதுவாகத்தான் பேசுகிறார், யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் ஏன் எங்கப்பன் குதிருக்குள்ளே இல்லை என்கிற மாதிரி*

2013 ஏப்ரல் 16]

முந்திக்கொள்கிறீர்கள். அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லாத போது, நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள். இது முறையல்ல, அவர் கேள்வி கேட்கிறார். (குறுக்கீடுகள்) அவரை பேசவே விடக்கூடாது என்று சொன்னால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அவர் தப்பாக எதுவும் பேசவில்லையே! தவறான வார்த்தையாக இருந்தால், அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம். மைக்கேல் ராயப்பன், நீங்கள் என்ன பேசினீர்களோ, இன்னொரு முறை அதைப் பேசுங்கள். தவறானது என்னவென்று சொல்லட்டும்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசுவதைக் கேளுங்கள், பிறகு என்ன குற்றம் இருக்கிறதென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடந்து முடிந்த வரலாற்றை ஞாபகப்படுத்துகிறார். தேர்தல் களத்திலே வந்தீர்கள், . . . (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்கார்ந்து கொண்டே பேசுவதில் நியாயமே இல்லை, முறையுமில்லை. மாண்புமிகு அமைச்சர் பேசும்போது குறுக்கிட்டுப் பேசுவது முறையல்ல.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் களத்திலே வந்தீர்கள், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரல் காட்டிய அத்தனை பேரும் வெற்றி பெற்றோம். கட்சியின் சார்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கிய தொகுதியிலிருந்து வந்தவர்கள், ஆளும் கட்சியாக வந்துள்ளார்கள். எங்களோடு இணைந்து நின்றவர்கள், வேறு கட்சி என்ற காரணத்தினால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒன்றும் மாற்றுக் கருத்தே இல்லை. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள். இதில்

கூச்சப்படுவதற்கோ, வெட்கப்படுவதற்கோ, வேதனைப்படுவதற்கோ ஒன்றும் இல்லை. இதில் குற்றச்சாட்டே எழவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் குற்றச்சாட்டாகக் கருதாமல், அப்படியே அவைக் குறிப்பிலே ஏற்றிக்கொள்ள வேண்டும். இதை வரலாறு சொல்லும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்கார்ந்து கொண்டு பேசுவது முறையில்லை, நான் எச்சரிக்கிறேன், உட்காருங்கள், திரு. சி. மைக்கேல் ராயப்பன், நீங்கள் பேசுங்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்திருக்கின்ற நன்மைகளைத்தான் நான் சொல்லிக்கொண்டு இருக்கின்றேன். அவர்கள் ஏன் இவ்வளவு கோபப்படுகிறார்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் அவர்கள் அநாகரீகமான வார்த்தைகளைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில் அரசர்குளம் என்ற கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் வேண்டுமென்பதற்காக இந்தக் கேள்வியை நான் எழுப்பினேன். இந்தக் கேள்வி இன்றைக்கு வருவதற்கு முன்னாலே, இந்த இடைப்பட்ட காலத்திற்குள்ளாகவே, அங்கே கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முன்பெல்லாம் அம்மாவை வணங்கினால், வணங்கிய கரங்கள் விலகும் முன்பே வரம் கிடைத்துவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்போதெல்லாம் அம்மாவை வணங்க நினைத்தாலே வரம் கிடைத்துவிடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் கோரிக்கை எழுப்புகிற குரல்களைவிட, தமிழகத்தில் அம்மாவிற்கு நன்றி தெரிவிக்கின்ற குரல்கள்தான் நாடெங்கும் ஒலிக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவிற்கு நன்றி உரைக்கின்ற*

ஒலிகள்தான் நாடெங்கும் எதிரொலிக்கின்றன என்று சொல்லி, அரசர்குளம் கிராமத்து மக்களின் கோரிக்கையைக் கனிவோடு தீர்த்துவைத்த, நான் வணங்கும் அரசியின் பொற்பாதங்களில் நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, அமர்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

முற்பகல் 10—55

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இம்மாமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

'மாபெரும் சபைதனில் நீ நடந்தால், உனக்கு மாலைகள் விழ வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மாற்று குறையாத மன்னவன் இவன் என்று போற்றிப் புகழ வேண்டும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பாடல் வரிகளுக்கு சொந்தக்காரரான, உலகில் வாழ்கின்ற நடிகர் உலகத்திற்கெல்லாம் அரசியல் கற்றுக் கொடுத்த அரசியல் ஆசானாக (மேசையைத் தட்டும் ஒலி) திரைப்படங்கள் மூலமாக பல உயரிய கருத்துகளை – பள்ளியிலே வாத்தியாராக அல்ல, பள்ளியிலே ஆசிரியராக அல்ல, பேராசிரியராக, ஒரு பல்கலைக்கழகமாக இருந்து மறைந்து இன்றும் நம் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர், மக்கள் திலகம் அவர்களின் பெயரை, உள்நாட்டு வருகைக்காக புதியதாகக் கட்டப்பட்டிருக்கும் விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு பெயர் சூட்டியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது என்று சொல்லி, 'வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்; வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார் (மேசையைத் தட்டும் ஒலி) மாபெரும் வீரர் மானம் காத்தோர் சரித்திரம் தனிலே நிற்கின்றார்' என்ற வரிகளைத்தான் நான் சொல்ல வேண்டும். காரணம், கலை உலகத்திற்குப் பெருமை சேர்த்தவர், புரட்சித் தலைவர் மக்கள் திலகம் என்றும் நம் உள்ளங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கும் அவர் கலை உலகத்தின் முன்னோடியாக இருந்துகொண்டிருக்கிறார்.

என் அன்புச் சகோதரர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள் பேசும்போது சிலர் எப்படி இருக்கக்கூடாது என்பதைப் பற்றி பேசியிருக்கின்றார்கள். அதில் வருத்தப்படுவதற்கான அவசியமே இல்லை. அந்த வார்த்தையை நீங்கள் தயவுசெய்து நீக்க வேண்டாம். ஏனென்றால், நான் மீண்டும் அழுத்தமாக, ஆழமாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சபையிலே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இருக்கிறது. ஏனென்றால், நான் கேள்வி கேட்பதிலேகூட இந்தக் கேள்விகளை எப்படிக் கேட்பது, இதை எப்படி முடித்து வைப்பது, இந்தக் கோரிக்கைகளை எப்படி நாம் நிறைவேற்றிக்கொள்வது என்று எண்ணிக்கொண்டு அமர்ந்திருக்கையிலே இப்படி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு கேள்விக்கும் எழுந்து நின்று இவர்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள் என்றால், இங்கே கேட்க வந்த கேள்விகளும், நமக்காக மக்கள் வெளியே எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற பதில்களும் அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடும் என்பதைச் சுட்டிக்காட்டி என் கேள்வியைக் கேட்க முனைகிறேன்.

தென்காசி தொகுதி, தென்காசி நகரில் 1, 2, 4, 5, 22 மற்றும் 26 ஆகிய வார்டுகளிலும், சுந்தரபாண்டியபுரத்திலும் உள்ள நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இப்பகுதியில் வாடகையும் கூடுதலாகச் செலுத்த வேண்டியுள்ளது. அடிக்கடி கட்டடத்தை மாற்றும்போது நுகர்வோர்கள் பொருட்களை அங்கே சென்று வாங்கும்போதும் சிரமம் ஏற்படுகிறது என அறிகிறேன். இக்கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதால், அரசுக்குத் தொடர் கூடுதல் செலவினம் ஏற்படாமல் இருக்கும். ஆகவே, இக்கடைகளுக்கு சொந்தக் கட்டடத்தைக் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத்

2013 ஏப்ரல் 16]

தலைவர் அவர்களே, அது ஊராட்சிப் பகுதியாக இருப்பதனால், அந்தப் பகுதியில் நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்த இடம் இருக்கும் சூழ்நிலையில், ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து நிதியைப் பெற்றோ மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அதற்கான கருத்துருவைப் பெற்று அவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான முனைப்பான ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

232—

மேம்பாலம்

***7190—திரு. கே.பி. நாகராஜன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மைலம் தொகுதி, கூட்டேரிப்பட்டில் திருச்சிராப்பள்ளி–சென்னை நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

மைலம் தொகுதி கூட்டேரிப்பட்டில் மேம்பாலம் அமைப்பதற்கு விரிவான அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.